**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மேலூர்**

**முன்னிலை: செல்வி.த.தென்றல் முத்து, L.L.M.,**

**நீதித்துறை நடுவர், மேலூர்**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30–ஆம் நாள் திங்கள்கிழமை**

**<u>முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.3/2026</u>**

...

மேலூர் காவல் நிலையம்
குற்ற எண்.444/2025
பிரிவுகள் 191(2), 191(3), 238, 103(1) BNS .... குற்றமுறையீட்டாளர்

**//எதிரிடை//**

1) சந்தானம்,
த/பெ.பூபதி,
3/241, வினோபா காலனி,
புதுசுக்காம்பட்டி அஞ்சல்,
மேலூர் தாலுகா, மதுரை மாவட்டம்

2) விஜயபாரதி (எ) பாரதி,
த/பெ.வெங்கடேஷ்,
14/3, அம்பேத்கர் 1–வது தெரு,
சொக்கம்பட்டி, மேலூர் டவுன்,
மதுரை மாவட்டம்.

3) முத்துமணி,
த/பெ.பிச்சைமணி,
15பி, அம்பேத்கர் 3–வது தெரு,
சொக்கம்பட்டி, மேலூர் டவுன்,
மதுரை மாவட்டம்.

4) பாண்டிதுரை,
த/பெ.முத்தன்,
253, வினோபா காலனி,
புதுசுக்காம்பட்டி, மேலூர் தாலுகா,
மதுரை மாவட்டம்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.30 07:02:22 +0530

5) கோவிந்தராஜ்,
த/பெ.பால்துரை,
முத்தமிழ் நகர்,
1–வது தெரு, மேலூர் டவுன்,
மதுரை மாவட்டம். ....எதிரிகள்

இவ்வழக்கானது மேலூர், நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 20.01.2026–ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, PRC No.3/2026 என்ற எண் வழங்கப்பட்டு, அரசு சார்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை II அவர்கள் ஆஜராகியும், 1–ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.செல்லப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், 2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சுரேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், 4–ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.செந்தமிழன் அவர்கள் ஆஜராகியும், 5–ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ராஜேஷ் அவர்கள் ஆஜராகியும், இவ்வழக்கில் ஆவணங்களைப் பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

1) இவ்வழக்கின் வாதி ஆர்த்தி என்பவரின் கணவரான ராம்பிரசாத் என்பவர் மதுரை மாவட்டம். மேலூர் பஸ் ஸ்டாண்ட் பின்புறம் உள்ள கிங்பிசர் பாரில் தினக்கூலியாக வேலை பார்த்து வந்துள்ளார். வாதியின் கணவர் ராம்பிரசாத் 16.09.2025–ம் தேதி இரவு இருசக்கர வாகனத்தில் மேற்கிலிருந்து கிழக்குநோக்கி அதாவது மேலூர் சுந்தரி டவர் பக்கம் இருந்து மேலூர் பஸ் ஸ்டாண்ட் நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்துள்ளார். அவர் பஸ் ஸ்டாண்ட் முன்பு சாலையின் நடுவே உள்ள தடுப்பு

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.30 07:02:30 +0530

சுவரின் வடக்கு பக்கம் வருவதற்கு பதிலாக தெற்கு பக்கம் தடுப்பு சுவரை ஒட்டினார் போல் எதிர்திசையில் வந்துள்ளார். வாதியின் கணவர் ராம்பிரகாஷ் பஸ் ஸ்டாண்ட் அருகே SS Coffee பார் வலது பக்கம் உள்ள bar–க்கு செல்லும் பாதையில் செல்வதற்காக இருசக்கர வாகனத்துடன் 16.09.2025–ம் தேதி இரவு சுமார் 8.00 மணியளவில் வளைந்த போது எதிர் திசையில் வைரப்பிரகாஷ் ஹோட்டல் பக்கம் இருந்து இருசக்கர வாகனத்தில் வந்த 1–வது எதிரி புதுச்சுக்காம்பட்டி வினோபா காலனியை சேர்ந்த சந்தானம் என்பவர் வாதியின் கணவர் ராம்பிரகாஷ் ஓட்டி சென் இருசக்கர வாகனத்தின் மீது மோதியுள்ளார். இதில் வாதியின் கணவரான ராம்பிரகாசுக்கும், 1–வது எதிரி சந்தானம் என்பவருக்கும் இலேசான காயம் ஏற்பட்டு இருவருக்கும் வாய்தகராறு ஏற்பட்டுள்ளது. உடனே 1–வது எதிரி சந்தானம் போன் செய்தவுடன் 2 முதல் 5 வரையிலான எதிரிகள் சம்பவயிடத்திற்கு வந்துள்ளார்கள். 2 முதல் 5 வரையான எதிரிகள் அனைவரும் சம்பவயிடத்திற்கு வந்தவுடன் 1–வது எதிரிக்கு ஆதரவாக கொலையுண்டு இறந்துபோன வாதியின் கணவரான ராம்பிரகாசை பார்த்து நீ எப்படி வண்டியில் சாலையில் குறுக்கே வரப்போச்சு நீ குறுக்கே வந்ததால்தான் இருசக்கர வாகனம் மோதி சந்தானத்திற்கு காயம் ஏற்பட்டது என ராம்பிரகாசுடன் வாக்குவாதம் செய்து நீ எப்படி மோதப்போச்சு தேவிடியா மகனே, கோத்தா, கொம்மா என அசிங்கமாக திட்டி கையால் அடித்து கீழே தள்ளி ராம்பிரகாசின் முகம், கழுத்திலும் நெஞ்சிலும் ஆகிய இடங்களில் காலால் மாறி மாறி மிதித்து மேலும் 1, 2 எதிரிகள் கீழே கிடந்த கல்லை எடுத்து கீழே கிடந்த கற்களை எடுத்தும் ராம்பிரகாசின் பின்தலையில் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தி சாகடித்துவிடுவோம்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.30 07:02:35 +0530

என கொலைமிரட்டில் விடுத்துள்ளார்கள். இதில் ராம்பிரகாஷ் தலையில் ரத்தக்காயம்பட்டு அந்த இடத்திலேயே மயங்கியுள்ளார். அப்போது 5–வது எதிரி வாதியின் கணவர் ராம்பிரகாஷை பார்த்து இவனை உயிரோடு விடக்கூடாது என்று சொல்லி அவரும் ஓடி வந்து காலால் மாறி மாறி தலையில் மிதித்துள்ளார். காயம்பட்ட ராம்பிரகாசை சிகிச்சைக்காக மேலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்து பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவனையில் 16.09.2025–ம் தேதி சேர்த்து சிகிச்சை பலனின்றி 19.09.2025–ம் தேதி காலை 9.40 மணிக்கு இறந்துபோயுள்ளார். 2, 3 எதிரிகளை கைது செய்து விசாரித்தபோது அவர்கள் கொலை குற்றச்சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி கோவிந்தராஜ் என்பவரை பற்றி எவ்வித தகவலும் சொல்லாமல் இக்குற்றச்சம்பவத்திலிருந்து எதிரியை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி கோவிந்தராஜ் என்பவரை மறைத்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே 1, 4, 5 எதிரிகள் சட்டப்பிரிவுகள் 191(2), 191(3), 103(1) BNS–ன்படியும், 2, 3 எதிரிகள் பிரிவுகள் 191(2), 191(3), 238, 103(1) BNS–ன்படியும் தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளார்கள்.

2) இவ்வழக்கின் 1 முதல் 5 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான போது அவர்களுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 230 BNSS–ன் கீழ் கட்டணமின்றி வழங்கப்பட்டது.

3) வழக்கு விசாரணையின் போது அமர்வு நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வைத்து வாதாட வசதி உண்டா? என வினவியபோது, 1 முதல் 5 எதிரிகள் "உண்டு" என்று கூறினார்கள்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.30 07:02:40 +0530

4) வழக்கு விசாரணையின் போது பிணையில் உள்ள மேற்படி 1 முதல் 5 எதிரிகள் வழக்கு விசாரணை முடியும் வரை அதே பிணையில் இருக்கவும், பிரிவு 323/362 BNSS–ன் கீழ் மதுரை, முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவும் அலுவலகத்திற்கு உத்தரவிடப்படுகிறது.

5) இவ்வழக்கில் பிணையில் உள்ள 1 முதல் 5 எதிரிகள் வரும் 29.04.2026–ஆம் தேதி காலை 10.00 மணியளவில் மதுரை, மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என பிரிவு 323/362 BNSS–ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 30–ம் நாள், இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.30 07:02:45 +0530

நீதித்துறை நடுவர்,
மேலூர்.

<u>நகல்:</u>

1) மதுரை மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2) அரசு குற்றத்துறை வழக்கறிஞர், மதுரை.